**STARTING TIME 01.08 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 207/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 01.02.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **மனோகரன்** Father's Name :

Address :

Calling : Age :

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

12. எனது தாயார், எனது மூத்த சகோதரி பெயருக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ–10 கிரைய பத்திரம் செல்லாது என்று பரிகாரம் இவ்வழக்கில் கேட்டுள்ளேன் என்றால், சரிதான். எனது தாயார் எழுதி கொடுத்த அந்த கிரைய பத்திரத்தில் எனது அம்மாவுடன், எனது உடன் பிறந்தவர்களும் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால், 4ம் பிரதிவாதி பூங்குழலி கையெழுத்து செய்யவில்லை என்று அவர் என்னிடமும் சொல்லி உள்ளார், பதிலுரையிலும் சொல்லி உள்ளார்.

13. என் தாயார் எழுதி கொடுத்த கிரையப் பத்திரத்தில் தனக்காகவும், இளவர் பாக்கியரதி என்பவருக்காகவும் சேரந்து எழுதி கொடுத்துள்ளார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ–10 கிரையத்தின் போது எனக்கு என்ன வயது என்றால், 35 முதல் 40 வயது இருக்கும். நான் எந்த வருடம் பிறந்தேன்

என்றால், 1955ம் ஆண்டு பிறந்தேன். 1992ம் ஆண்டு சுமார் 37 வயதுடைய எனக்கு என் தாயார் எழுதி கொடுத்த கிரையபத்திரம் பற்றி வழக்கு தாக்கல் செய்த நாள் வரை தெரியவில்லை என்று சொல்கிறேனா என்றால், ஆமாம்.

14. எனது குடும்பத்தில் உள்ள அனைவரும் சேர்ந்து எடுத்த முடிவின்படி தான் எனது தாயார் வா.சா.ஆ–10 கிரைய பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. நான் கொடுத்த மன உளைச்சலால் தான் என் தாயார் அந்த கிரைய பத்திரத்தை எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால், சரியல்ல.

15. தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து அபகரிக்க முயற்சி செய்த நபர் மீது என் தாயார் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் வட்டாட்சியரிடம் கொடுத்த புகாரின் பேரில் வட்டாட்சியர் விசாரித்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

16. குப்பன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறி அவர் மீது வட்டாட்சியரிடம் எனது தாயார் ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால், புகார் கொடுத்த விவரம் தெரியாது, ஆனால் நான் வெளிநாடு செல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதால், தாவா சொத்தை பார்த்து கொள்ளவேண்டி நான் தான் குப்பன் என்பவருக்கு அனுமதி கொடுத்தேன்.

17. எனக்கு எந்த வருடம் திருமணமானது என்றால், 1988ல் நடந்தது. குப்பன் என்பவர் எனக்கு என்ன உறவு என்றால், என் மனைவியின் சித்தப்பா ஆவார். என்னுடைய கட்டாயத்தின் பேரில் தான் குப்பன் என்பவர் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வருகின்றார் என்றால், சரியல்ல.

18. தாவா சொத்தானது நிலமற்ற பட்டியல் இன மக்களுக்காக வழங்கப்பட்ட சொத்து என்றும், அதை விற்பனை செய்ததே தவறு என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால், என்னுடைய பாகத்தை கேட்டும், எனது தங்கைக்கு எழுதி கொடுத்த கிரையம் செல்லாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளேன்.

19. பட்டியல் இன மக்களுக்காக வழங்கப்பட்ட நிலத்தை வேறு சமூக

மக்களுக்கு விற்பனை செய்தது தவறு என்று நான் வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால், இல்லை. நில ஒப்படைவு செய்த 10 வருடங்களுக்கு பிறகு நிலத்தை விற்பனை செய்ய உரிமை உள்ளது என தாவாவில் சொல்லி உள்ளேன் என்றால், அரசாங்கத்தின் அனுமதி பெற்று விற்பனை செய்ய உரிமை உள்ளதாக சொல்லி உள்ளேன், அவ்வாறு அனுமதி பெறாமல் விற்பனை செய்தால், அந்த கிரையம் செல்லாது என்றும் சொல்லி உள்ளேன்.

20. பட்டியல் சமூகத்தை சேராத ஒரு நபரை தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ய நான் அனுமதித்துள்ளேன் என்றால், ஆக்கிரமிப்பு செய்ய அனுமதிக்கவில்லை, சொத்தினை பார்த்து கொள்ள தான் அனுமதி கொடுத்தேன். குப்பன் என்பவர் பட்டியல் சமூகத்தை சேர்ந்தவரா என்றால், இல்லை. நான் வேறு ஒரு சமூகத்தை சேர்ந்த மேற்படி குப்பன் என்பவரை வலுகட்டாயமாக தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருக்க அனுமதித்துள்ளேன் என்றால், சரியல்ல.

21. எனது தாயார் உயிருடன் இருக்கும்போதே அவரது சம்மதத்தின் பேரில் எனது உடன் பிறந்த சகோதரிகள் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால், பட்டா மாறி உள்ளது, ஆனால் என் அம்மா அதற்கு சம்மதம் கொடுத்தாரா என்று தெரியாது. நான் கொடுத்த மன உளைச்சலின் காரணமாக தான் எனது அம்மா பட்டாவை எனது சகோதரிகள் பெயருக்கு மாற்றிக் கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார் என்றால், சரியல்ல.

22. வா.சா.ஆ–10 கிரையபத்திரத்தை எனது அம்மா உரிய பிரதிபலனை பெற்றுக் கொண்டுதான் எழுதி கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் மின் இணைப்பு யார் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நடத்தி வரும் ஓட்டல் தொழிலில் வரும் வருமானம் யார் யாருக்கு வருகிறது என்றால், அதில் ஓட்டல் தொழிலும் நடைபெறவில்லை வருமானமும் வரவில்லை.

23. இவ்வழக்கானது காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், தாவா

தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால், சரியல்ல. எனது அம்மா விட்டுச் சென்ற வேறு சொத்துக்கள் சம்மந்தமாக பாகம் கேட்டு வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கபட்டது.

ENDING TIME 01.39.P.M.

G YUVARAJ

Digitally signed by G YUVARAJ
Date: 2025.02.01 15:05:07 +0530